**செய்தி வெளியீடு எண்: 281** **நாள்: 13.05.2019**

# செய்தி வெளியீடு

பி.எஸ்.சி தேர்ச்சி மற்றும் 35 வயதிற்குட்பட்ட பெண் செவிலியர்கள் (அனைத்து பிரிவுகளும்) மற்றும் ஆண் செவிலியர்களுக்கான (அவசர சிகிச்சை, மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை) நேர்முகத் தேர்வு கொச்சியில் 20.05.2019 முதல் 24.05.2019 வரை, சவூதி அரேபிய அமைச்சகத்தினரால் நடத்தப்பட உள்ளது. நேர்க்காணலில் கலந்து கொள்ள ஐந்து வருட பணி அனுபவம் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்களுக்கு மாத ஊதியம் அனுபவத்திற்கேற்றவாறு சுமார் ரூ.80,000/- இலவச விமான டிக்கெட், உணவு, இருப்பிடம், விசா, மருத்துவச் சலுகை, போக்குவரத்து, 35 நாட்கள் சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு மற்றும் சவூதி அரேபிய அமைச்சகத்தின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள செவிலியர்கள், தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் ஆதார் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemclmohsa2018@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 17.05.2019க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு 044-22505886/22502267/8220634389 என்ற தொலைபேசி எண்களில் அல்லது www.omcmanpower.com என்ற வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனத்தின் முகவர் எண் Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84 ஆகும்.

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு**
**நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**